**EA.145/2023 in EP.84/2009 in OS.182/1992**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 15.09.2025 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி .Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்-

| | | | |
|---|---|---|---|
| தேதி | 15.09.2025 | சாட்சி | ம.சா.2 |
| பெயர். | கணபதி | வயது.. | 71 |
| தந்தை பெயர். | தர்மலிங்கம் | கிராமம்.. | பி.முட்லூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. எனக்கு ஜீவரத்தின நாடாரை தெரியும். ஜீவரத்தின நாடாருக்கு உடன்பிறந்த சகோதரிகள் 3 பேர், அவர்கள் சுசிலா கடைசி மகள், மற்றவர்கள் பெயர் தெரியாது. ஜீவரத்தின நாடாருக்கு மனைவி ராஜேஷ்வரி, இரண்டு மகன்கள் உள்ளார்கள். சுசீலா, ஞானசௌந்தரி தேவகி ஜீவரத்தின நாடார், அவர் மனைவி குடும்பத்திற்குள் பாக வழக்கு நடந்தது எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் பாக வழக்கில் ஜீவரத்தின நாடார் வழக்கு சொத்தை பங்கு பிரித்துக்கொடுக்கவில்லை. நீதிமன்றத்தில் வழக்கு நடந்த விபரம் எவ்வாறு தெரிந்துக்கொண்டேன் என்றால் யாரிடமும் விசாரிக்கவில்லை நான் பக்கத்தில் தான் இருக்கிறேன். மனுதாரர்களான ஜோதிலிங்கம், சம்பத் சொத்தை கிரணம் வாங்குவதற்கு வில்லங்கம் எடுத்து பார்த்தார்களா என்றால் கிரயம் வாங்கிய பிறகு தான் எனக்கு தெரியும்.

2. கிரயம் வாங்கி 3 நாட்களுக்குள் தெரியும். எவ்வளவு பணம் கொடுத்தார் கள், எவ்வளவு ரூபாய்க்கு பத்திரம் வாங்கினார் கள் என்ற விபரம் எல்லாம் எனக்கு தெரியாது, மேற்சொன்ன பத்திரத்தை வாங்கி பார்க்கவில்லை. பத்திரம் எழுதி இரண்டு நாட்கள் கழித்து பதியப்பட்டதாக சொன்னார் கள். சாட்சி கையொப்பம் யார் செய்தார்கள் என்றால் நான் பத்திரத்தை பார்ககவில்லை அதனால் தெரியாது. எந்த சொத்தை எந்த சக்குபந்தியில், எந்த புல எண்ணில் கிரயம் பெற்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்சொன்ன பத்திரத்தை நான் இன்று வரை பார்த்தது இல்லை. அதனால் பத்திரத்தின் விபரமும், சாட்சிகளும் தெரியாது என்றால் சரிதான். பி.முட்லூர் கிராமத்தில் முகமது யூனஸ் -யை தெரியுமா என்றால் தெரியும் அவர் சிங்கபூரில் இருக்கிறார். 07.04.2005 இல் முகமது யூனிஸ் ற்கு, ஜீவரத்தின நாடார்

சகோரிகளான சுசீலா, ஞானசௌந்தரி கிரயம் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த கிரய பத்திரத்தில் வழக்கு எண்.OS.182/1992 வழக்கில் கிடைக்கப்பெற்ற சொத்து என்று குறிப்பிட்டு எழுதப்பட்ட விபரம் தெரியாது.

3. ராஜேஷ்வரியின் வாரிசுகள் மனுவில் சேர்த்த விபரம் எனக்கு தெரியாது. சங்கர், சரவணன் அரசாங்கத்திடம் இருந்து கிரயம் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சாலையை அகலப்படுத்துவதற்காக எடுத்தார்கள், அதற்கு பணம் வாங்கினார்கள். எவ்வளவு ரூபாய் வாங்கினார்கள் என்றால் எனக்கு தெரியாது. சங்கர், சரவணன் தவிர வேறு யார் பணம் வாங்கினார்கள் என்றால் ராமமூர்த்தி. ராஜாராமன் பணம் வாங்கினார்கள் கிரய பத்திரம் எழுதிக்கொடுத்த விபரம்தெரியாது. சங்கர், சரவணன் கிரய பத்திரம் பற்றி தெரியாது. மொத்தம் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 7-8 பேர இருத்திருப்பார்கள். அரசாங்கம் பத்திர பதிவேடு பார்த்தார்களா என்றால் பார்த்திருப்பார்கள். சங்கர், சரவணனிடம் இருந்து எவ்வளவு செண்ட் வாங்கினார்கள் ரோட்டில் இருந்து 1 செண்ட் தள்ளியிருப்பார்கள்.

4. அந்த பத்திரங்களில் நான் சாட்சி கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. அனைவருக்கும் cheque ஆக கொடுத்தார்கள். மனுதாரர்கள் வீடு கட்டியுள்ள சர்வே எண். தெரியாது,, எவ்வளவு விஸ்திரணத்தில் என்றால் 25 அகலம் 40 அடி நீளத்தில் கட்டியுள்ளார்கள். எத்தனை வருடத்திய வீடு என்றால் சுமார் 15-16 வருட வீடு முன்பு கூரையாக இருந்தது தற்போது சிமெண்ட் ஷீட் போட்டுள்ளார்கள். மனுதாரர்களுக்கு வேறு சொத்து உள்ளதா என்றால் உள்ளது. நிறைய சொத்துக்கள் உள்ளது விபரம் சொல்ல இயலாது. மனுதாரர்களை அவர்களது தகப்பனார் காலத்தில் இருந்தே தெரியும், நான் கொத்தனாராக பணி செய்கிறேன். மனுதாரர் வீட்டில் கொத்தனார் பணி செய்யவில்லை. பி.முட்லூர் கிராமத்தில் எவ்வளவு சொந்தமான வீடுகளில் நான் வேலை செய்திருக்கிறேன் என்றால் 6-7 வீடுகளில் வேலை செய்திருக்கிறேன். மனுதாரர்கள் வீட்டில் நான் கொத்தனாராக வேலை செய்தியிருக்கிறேன் அந்த விஸ்வாசத்தில் அவர்களுக்கு ஆதராவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct. Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.